OS. 69/2021

நாள். 12.03.2026.

பி.வா.சா.1 – செய்யது அமீனுதீன், த/பெ.அப்துல் ரகீம்

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

வாதிகள் மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகள் சகோதரர்கள் என்றால் சரிதான். வாதிகள் மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு சுல்தானியாபேகம் என்ற சகோதரி இருந்தார் என்றால் சரிதான். அவரது வாரிசுகள்தான் 6 முதல் 9 பிரதிவாதிகள் என்றால் சரிதான். வாதிகள் தாவா சொத்துக்களில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வாதிகள் வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்களை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். நான் தனியாக வாதிகளின் வழக்கை மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் வாதிகளின் வழக்கு தவறு என சொல்லப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் அனைத்தும் என் தந்தை அப்துல் ரகீமுக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா 1ம் இலக்க சொத்தான புல எண்.51/2 ல் கண்ட 30 சென்டு நிலத்தில் 15 சென்டை என் அப்பா கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. என் தாயார் 01.06.1973 ல் கிரையம் வாங்கிய சொத்தை எனக்கு பவர் கொடுத்து நான் 6ம் பிரதிவாதிக்கு ரூ.60 ஆயிரத்துக்கு அடமானம் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அடமானம் வைத்த சொத்து இன்னும் திருப்பப்படாமல் உள்ளது என்றால் சரிதான். என் தாயார் 2009ம் ஆண்டு இறந்தார். என் தாயார் இரண்டு வருடகாலம் நோய்வாய்ப்பட்டு இருந்தபோது யார் பார்த்துக்கொண்டார்கள் என்றால் நான்தான் பார்த்துக்கொண்டேன். என் தயார் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் மனநிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. என் தாயார் உயிரோடு இருக்கும் வரை எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.